**லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனி - 2024**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 214 நாட்கள் முதல் 1,095 நாட்கள் வரையான காலம் அறவிடப்படாமல் காணப்படுகின்ற ரூபா 65,039,660 வர்த்தக பெற வேண்டியவைகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் இழப்பீட்டு | உரிய நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | ஊழியர் நலன்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 64, 65 மற்றும் 66 ஆம் பந்திகளின் பிரகாரம் பணிக்கொடைப் பொறுப்புக்கள் இனங்காணும் போது ஆயுட்கால எண்ணிக்கை நலன் முறைமை அல்லது எதிர்பார்க்கப்பட்ட அலகு நலன் முறைமை பின்பற்றப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனி நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கம்பனியின் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது ஊழியர்களுக்காக பணிக்கொடைக் கட்டணம் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்படுகின்றது. | நியமத்தின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நாளாந்த ஒப்பந்த ஊழியர் சம்பளம் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக சம்பளம் மற்றும் ஊதியச் செலவினம் ரூபா 5,704,490 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சம்பளம் மற்றும் ஊதியக் கணக்கில் இரு தடவை குறிப்பிடப்பட்ட நாளாந்த ஒப்பந்த ஊழியர்களின் சம்பளத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக சம்பளம் மற்றும் ஊதியம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 989,079 ஆதனவரி மதிப்பீட்டுப் பெறுமதி செலுத்த வேண்டும் என மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதும் கம்பனியால் ரூபா 85,040 மாத்திரம் செலுத்த வேண்டிய மீதியாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 904,039 இனால் அதிகரித்தும் செலுத்த வேண்டிய மீதி அப் பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆதனவரிக் கட்டணம் அதிகரித்தமை தொடர்பான சலுகை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய பிரதேச சபையுடன் தற்போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிறுவனத்தின் தீர்மானம் கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாக தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் கணக்குகளில் வெளிப்படுத்துதல் மற்றும் சீராக்கங்கள் சரியான பெறுமதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 110,000 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் மீதி ரூபா 110,000 தொகை குறைத்து பதியப்பட்டமை சரி செய்யப்படும். | உரிய சகல பெறுமதிகளையும் உள்ளடக்கி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் மாதத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 332,675 ஆன சம்பளம் மற்றும் ஊதியங்கள் நடப்பாண்டின் சம்பளம் மற்றும் ஊதியமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நடப்பாண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுக்குரிய சம்பளம் மற்றும் ஊதியங்களின் மீதி இந்த ஆண்டில் இருந்து நீக்கி இலாபத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | விழா முற்பணம் | 174,609 | விழா முற்பணம் தொடர்பான விரிவான பட்டோலை | விழா முற்பணம் ரூபா 174,609 தொடர்பாக விரிவான பட்டோலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விழா முற்பணத்தின் விரிவான பட்டோலை ஒன்று நாளது வரையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு | 1,510,000 | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களுக்கு உரிய பட்டோலை | உரிய பட்டோலை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்வி வைப்புக்காக விரிவான பட்டோலை ஒன்று நாளது வரையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய சேவை நிலையங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,336,262 மீதிகளுக்கு உரிய எந்த ஒரு தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | ரூபா 6,336,262 மீதி தொடர்பாக எந்த ஒரு தகவல்களும் காணப்படாது இருந்தமையால் உரிய கிடைக்க வேண்டிய மீதி தொடர்பாக கண்டறிந்து அதற்குரிய பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டோலை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 16,081,469 ஆன வர்த்தக செலுத்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அறிக்கைத் திகதி வரையும் விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 16,081,469 மீதிகளுக்கு உரிய பட்டோலை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக பட்டோலை பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1982 இன் 03 ஆம் இலக்க சட்டத்தில் திருத்தப்பட்ட 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டத்தின் 16 மற்றும் 27 ஆம் பிரிவுகள் | சேவை வழங்குனரினால் ஒவ்வொரு மாதம் தொடர்பாகவும் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் ஊழியர் பங்களிப்புத் தொகை நிதியத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் தாமதமாக செலுத்தப்பட்ட பங்களிப்புப் | 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு பணம் பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தாமதம், அந்த ஆண்டில் ஏற்பட்ட திடீர் வெள்ள நிலைமை மற்றும் வீதி நெருக்கடிகளின் அடிப்படையில் செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாக | சட்டத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதிகளில் பங்களிப்புப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணத்திற்காக மிகைக் கட்டணம் அறவிடப்படுகின்றது. கம்பனியினால் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்புப் பணம் தாமதம் ஆகி செலுத்தியதன் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 60,585 மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. எதிர்காலத்தில் இந்த தாமதங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் இலக்கம் 158 (1) (ஆ) உப பிரிவு | ஏதாவது வரி ஒன்று செலுத்தாமை தொடர்பாக இருக்குமிடத்து அந்த வரியை அறவிடுவதற்கு உள்ள ஆதனங்கள் மற்றும் செலுத்துதலை புறக்கணிப்பார்களாயின் அசைவுறும் அல்லது அசைவுறாத சகல ஆதனங்களையும் தடை செய்து விற்பனை செய்வதன் மூலம் அந்த வரி மற்றும் அறவிடல் கட்டணம் என்பவற்றை அறவிடும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் காணப்படுவதுடன் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கு உரிய ரூபா 1,730,887 ஆதனவரி செலுத்தாமையின் காரணமாக அசைவுறும் மற்றும் அசைவுறாத ஆதனங்களை தடை செய்யும் அறிவித்தல் கம்பனிக்கு எதிராக அனுப்பப்பட்டிருந்தது. | ஆதனவரிக் கட்டணம் அதிகரித்தமை தொடர்பாக சலுகை ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக உரிய பிரதேச சபையுடன் தற்போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிறுவனத்தின் தீர்மானம் கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் ஆதனவரி கட்டணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 1533/16 என்ற 2008 சனவரி 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | கழிவுப் பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்ட முறைமை ஒன்றைப் பின்பற்றி சுற்றாடல் | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய கலந்துரையாடல் பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது. அதற்குரிய நிறுவனத்தில் | சட்டம் மற்றும் உரிய ஏனைய பிரமாணங்களின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதிப் பத்திரம் பெற வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | மேற்கொள்வதற்குரிய செயற்பாடுகளை துரிதப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய இலக்கம் 1/2015 (II) என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனியின் தலைவர் மற்றும் பொது முகாமையாளருக்கு உரித்தான எரிபொருள் அளவினை விஞ்சி முறையே ரூபா 237,915 மற்றும் ரூபா 120,445 ஆக கூட்டுப் பெறுமதி ரூபா 358,360 ஆன எரிபொருள் சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. | தலைவர் மற்றும் பொது முகாமையாளருக்கு நிறுவனத்தின் கடமைகளுக்காக எரிபொருள் வழங்கப்பட்டதுடன் அதற்கு முரணாக வழங்கப்பட்டிருந்த எரிபொருள் தொடர்பாக கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் படி வழங்குவதற்கும், எரிபொருளுக்காக செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டியின் 05 ஆம் அத்தியாயம் | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்தப் பெறுகைகள் திட்டம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னரும், வரைவு வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள்ளும், வருடாந்த அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள்ளும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் நிறுவனம் கலைப்பதற்கு அமைச்சரவைக் குறிப்பு ஒன்று காணப்பட்டமையால நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு உரிய திட்டங்களை கையளிப்பதற்கு முடியாது இருந்தது. எதிர்காலத்தில் உரிய அறிக்கை உரிய கால எல்லையில் அறிக்கைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டியின் பிரகாரம் குறித்துரைத்த திகதிகளின் போது உரிய ஆவணங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 01/2020 என்ற பொது முயற்சிகள் | எதிர்வரும் நிதியாண்டின் சனவரி 15 ஆந் திகதிக்கு முன் உரிய நிதியாண்டிற்கான பொருள் | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் குறித்துரைத்த | சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 756 (6) ஆம் பிரிவு | மெய்மையாய்வு நடவடிக்கைகள் பௌதீக ரீதியில் பூர்த்தி செய்வதற்கும் எதிர்வரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கம்பனியால் 2025 நவம்பர் 06 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | திகதிகளில் மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,419,961 நட்டம் ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 28,039,032 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 30,458,993 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாக செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 12 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் விற்பனைக் கிரயம் 31 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 1.6 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அந்த விகிதம் 1.9 ஆகும்.

மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 17 சதவீதமாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் 29 சதவீதம் ஆனமையால் அந்த விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 12 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையொன்றிற்குரிய லொறி வண்டியைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக கணக்காய்வுத் திகதி வரையில் 03 வருடங்களும் 08 மாத காலமும் கடந்திருந்ததுடன் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக இதுவரை | அந்த லொறி வண்டியை மிகவும் விரைவாக பழுது பார்த்து கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த திகதிகளின் போது உரிய பழுது பார்த்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் அதற்குரிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,048,865 செலவிடப்பட்டிருந்த போதும் அந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கையளிப்பதற்கும், பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு உரிய பஜிரோ வண்டி ஒன்று பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக 2022 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு கிடைத்திருந்ததுடன் அந்த பழுது பார்த்தல் நடவடிக்கைகள் வெளி ஒப்பந்தகாரர் மூலம் உடன்படிக்கை இன்றி மேற்கொண்டு ரூபா 1,763,300 செலுத்தப்பட்டிருந்தது. அந்தப் பழுதுபார்த்தல்களின் போது இணங்கப்பட்ட நிறம் மாற்றம் அடைந்ததன் காரணமாக வாகனத்தின் உரிமையாளர் அந்த வாகனத்தை பெற்றுக் கொள்ளவதை நிராகரித்தமையின் அடிப்படையில் கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 06 ஆந் திகதி வரையிலும் அந்த வாகனத்தை உரிமையாளருக்கு கையளித்து பழுதுபார்த்தல் செலவினங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரிய அந்த வாகனம் சரியான முறையில் வர்ணம் பூசப்பட்டு உரிய நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளி ஒப்பந்தகாரர்களின் மூலம் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கை மற்றும் உரிய விதிகளின் பிரகாரம் உரிய சேவையினை பெற்றுக் கொள்வதற்கும் குறித்துரைத்த திகதியின் போது உரிமையாளருக்கு கையளிப்பதற்கு உரிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரசாங்கத்தின் பாடசாலைக் உரிய வான் வண்டி ஒன்று கம்பனியால் பழுது பார்க்கப்பட்டிருந்துடன் அந்த பழுதுபார்த்தலுக்காக அனுசரணையாளரால் செலுத்தப்பட்ட ரூபா 150,000 தொகை கம்பனியின் வேலைப் பொறியியலாளரால் இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற தனிப்பட்ட கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன் அப்பெறுமதி அவர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் போது செலுத்த வேண்டிய பணிக் கொடைத் தொகையில் இருந்து | இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய பணத்தை உத்தியோகத்தரின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்காத வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2026 சனவரியில் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அரசாங்கத்தின் பாடசாலைக்கு உரிய வான் வண்டி ஒன்று கம்பனியால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொண்டு 2024 மார்ச் 27 ஆந் திகதி பாடசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனிக்கும் பாடசாலைகளுக்கும் இடையே எந்த ஒரு நிதி ரீதியான அல்லது ஏனைய உடன்படிக்கை காணப்படாது இருந்தமையால் அப்பெறுமதியை செலுத்துவதற்கு முடியாது இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பழுதுபார்த்தலுக்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,239,530 பெறுமதியை அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 06 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்திற்கு பழுது பார்த்து வழங்கப்பட்டிருந்த வண்டியின் பட்டியல் பெறுதியைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாடிக்கையாளர்களுடன் முறையான இணக்கப்பாட்டுடன் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் பட்டியல் தாமதம் அடையாமல் கையளிக்கப்படல் வேண்டும். அவ்வாறு நிறுவனத்தில் அறவிட வேண்டிய பணத்தை தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் என்ற 02 மாத காலத்தில் சேவைக்கு அறிக்கையிட்ட நாட்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் 73 ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரம் இன்றி 2024 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,400,000 ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது. | சரியான ஊக்குவிப்பு படி திட்ட முறைமை ஒன்றை தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊக்குவிப்பு படி திட்ட முறைமை ஒன்றை தயாரித்து திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாமல் ஊக்குவிப்பு படி செலுத்தாதிருத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கம்பனியில் வாகன சேவை நிலையத்தின் | வாகன சேவை நிலையத்தின் நடவடிக்கைகளை உரிய திட்ட முறைமையின் பிரகாரம் மிகவும் | வாகன சேவை நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் சாத்திய ஆய்வை |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 10,945,007 ஆக இருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 12,320,126 ஆனமையால் அதன் நட்டம் ரூபா 1,375,119 ஆகும். அவ்வாறு 2024 யூன் முதல் இந்த சேவை நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் ரூபா 11,407,706 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கொண்டு குறித்துரைத்த திட்ட முறைமைக்கு இணங்க செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் பதவியணியினர் 2018 ஆம் ஆண்டின் போது அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டில் இருந்து இதுவரை 07 வருடங்கள் கடந்திருந்த போதும் கம்பனியால் ஊழியர்களை சேர்க்கும் நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியில் 28 பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 121 ஆக இருந்ததுடன் அதில் உயர் முகாமைத்துவ மட்டத்திற்கு உரிய பொது முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் கணக்காளர் பதவி 2021 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமை கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டிலும் அதிகளவான தாக்கத்தை செலுத்தியதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 45 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. | ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரித்துக் கொண்ட பின்னர் உரிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். | விரைவாக ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகரித்துக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |